**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை,மார்ச் - 2016**
**Term Examination, March - 2016**

FWC

| தரம் :- 13 (2016) | இந்திய வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

➤ 1 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1) ராவி 2) சட்லஜ் 3) கிருஸ்ணா
4) சினாப்ஸ் 5) ஜீலம் (.............)

2) 1) லோத்தல் 2) காவிரிப்பூம்பட்டினம் 3) சோம்நாத்
4) புரோச் 5) மும்பாய் (.............)

3) 1) 1ம் சந்திரகுப்தன் 2) சந்திரகுப்தமௌரியன் 3) மகாபத்மநந்தன்
4) தனநந்தன் 5) அசோகன் (.............)

4) 1) விசாகதத்தர் 2) கல்கணர் 3) சூத்திரகர்
4) தண்டி 5) பாவுர் (.............)

5) 1) தபதி 2) சுப்பாரக 3) தாமிரலிப்தி
4) பாருகச்ச 5) பாடலிபுத்திரம் (.............)

6) 1) பிரம்மா 2) ஆர்ஸ் 3) அஸ்வமேத
4) பிரஜாபத்ய 5) சும்பர (.............)

7) 1) பாஞ்சாலம் 2) குரு 3) கோசலை
4) அஸ்காம 5) உஜ்ஜைனி (.............)

8) 1) மெகஸ்தனிஸ் 2) பிளினி 3) ஜலிலி
4) தண்டி 5) அல்புருனி (.............)

9) 1) விக்கிரமசீல 2) வல்லபி 3) தக்ஹிலா
4) நாலந்தா 5) தௌலபாத் (.............)

10) 1) சமஸ்கிருதம் 2) சீகளம் 3) பிராகிருதம்
4) வங்காளம் 5) தெலுங்கு (.............)

➤ 11 - 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

11)
1) குப்தர் - கடோத்கஜன்
2) நந்தர் - தனநந்தன்
3) குசானர் - ஹர்சன்
4) மௌலரியர் - அசோகன்
5) சோழர் - இராஜேந்திரன் (.............)



agaram.lk
Scanned with CamScanner

12) 1) கங்கை - தாமிரலிப்தி
2) நர்மதை - பாருகச்ச
3) காவேரி - தஞ்சாவூர்
4) சிந்து - லோத்தல்
5) யமுனை - மதுரை (..........)

13) 1) பௌத்தம் - கௌதமபுத்தர்
2) சீக்கியம் - குருநானக்
3) சமணம் - நிகண்டநாதர்
4) இஸ்லாம் - நபி
5) பஞ்சாபி - வால்மீகி (..........)

14) 1) மௌரியர் - பாடலிபுரம்
2) குஷானர் - புருஷபுரம்
3) சோழர் - மதுரை
4) சுல்தானியர் - தில்லி
5) சாளுக்கியர் - வாதாபி (..........)

15) 1) வால்மீகி - இராமாயணம்
2) காளிதாசர் - மாளவிகாக்னி மித்ரம்
3) கௌடில்யர் - அர்த்தசாஸ்திரம்
4) விசாகதத்தர் - மேகதூதம்
5) ஹர்ஷவர்தனன் - நாகானந்தம் (..........)

➢ 16 - 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சில பெயர்கள் /கூற்றுக்கள்/திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் X,Y நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் /கூற்றுக்கள்/திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள 5 சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16)

| | X | | Y |
|---|---|---|---|
| i. | தர்மவிஜயக் கொள்கை | A | - கனிஷ்கன் |
| ii. | சிரண மோட்ச அனுக்கிரக கொள்கை | B | - அசோகன் |
| iii. | சீனாமீது படையெடுப்பு | C | - ஸ்கந்தகுப்தன் |
| iv. | ஹீணர் படையெடுப்பு | D | - இராஜபுத்திரர் |
| v. | அராபியர் படையெடுப்பு | E | - சமுத்திரகுப்தன் |

1) BCDEA 2) BEACD 3) BEADC 4) BECAD 5) BAECD (..........)

17)

| | X | | Y |
|---|---|---|---|
| i. | விக்கிரமாதித்தன் | A | - சந்திரகுப்தன் |
| ii. | மகாமல்லன் | B | - கனிஷ்கன் |
| iii. | இந்திய நெப்போலியன் | C | - சமுத்திரகுப்தன் |
| iv. | 2ம் அசோகன் | D | - நரசிம்மன் |
| v. | இந்தியரின் முதல் மாமன்னன் | E | - 2ம் சந்திரகுப்தன் |

1) EDCBA 2) EDBCA 3) EADBC 4) ECBAD 5) EDCBA (..........)



agaram.lk
Scanned with CamScanner

18)

| X | Y |
|---|---|
| i. இந்திய தொன்மை இலக்கியம் | A - மகாபாரதம் |
| ii. இண்டிய எழுதப்பட்ட மொழி | B - ஹரப்பா |
| iii. வீரகாவியம் | C - ரிக்வேதம் |
| iv. காந்தாரக் கலையின் தலைமைப்பீடம் | D - பெசாவர் |
| v. ஹரிபூபிய நகரம் | E - கிரேக்கம் |

1) CDBAE 2) CEADB 3) CEDAB 4) CBEDA 5) CADBE (............)

19)

| X | Y |
|---|---|
| i. உதயகிரி கல்வெட்டு | A - காரவேலன் |
| ii. பிடாரித்தூண் கல்வெட்டு | B - 2ம் சந்திரகுப்தன் |
| iii. கதிகும்பா கல்வெட்டு | C - ஸ்கந்தகுப்தன் |
| iv. சாஞ்சித் தோரணம் | D - உருத்திரகாமன் |
| v. ஜீகைர் சாசனம் | E - அசோகன் |

1) BCADE 2) BDCAE 3) BCEAD 4) BEADC 5) BCAED (............)

20)

| X | Y |
|---|---|
| i. அசோகன் | A - மகதம் |
| ii. கனிஷ்கன் | B - கன்னோசி |
| iii. பிம்பிசாரன் | C - காஞ்சி |
| iv. கர்ஷன் | D - புருஷபுரம் |
| v. சிம்மவிஸ்ணு | E - பாடலிபுரம் |

1) EDBAC 2) EDCAB 3) EABCD 4) EDABC 5) EADBC (............)

**21 - 25 வரையுள்ள எல்லா வினாக்களின் சரியான விடையினைத் தெரிது அதன் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

agaram.lk

21) பயணிகளின் இளவரசன் என அழைக்கப்பட்டவர்
1) இபன்பதூதா 2) தொலமி 3) யுவான்சுவாங்
4) அல்புருனி 5) இத்சிங் (.............)

22) புரந்தரன் என்று இருக்குவேதம் குறிப்பிடும் தேவன் மேல்வருவனவற்றுள் எப்பெயர் மூலம் இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படுகின்றான்?
1) குபேரன் 2) யமன் 3) பசுபதி
4) இந்திரன் 5) வருணன் (.............)

23) நவரத்தினங்களில் அடங்காதவர்
1) தன்வந்திரி 2) வராகமித்திரர் 3) ஆரியப்பட்டர்
4) காளிதாசர் 5) கரிசேனர் (.............)

24) 1ம் பரமேஸ்வரன் காலத்தில் படையெடுத்தவன்
1) 2ம் விக்கிரமாதித்தன் 2) 2ம் புலிகேசி 3) 1ம் விக்கிரமாதித்தன்
4) 1ம் புலிகேசி 5) மானவர்மன் (.............)

25) மேற்குத் தக்கணத்தில் கடலில் கலக்கும் ஆறு
1) கிருஸ்ணா 2) கோதாவரி 3) துங்கபத்திரா
4) நர்மதா 5) காவேரி (.............)



Scanned with CamScanner

➢ **26 - 30 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

26) சாதவாகனர்

1) சாதவாகனரைப் பிராமணர் என்று நாசிக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.
2) நாகபாலனை கௌதமி புத்திர சதகர்னியைத் தோற்கடித்துக் கொன்றான்.
3) கோதாவாரி கிருஷ்ணா நதிகளுக்கு இடைப்பட்ட ஆந்திரப் பிரதேசம் சாதவாகனரின் இராச்சியத்தின் பிரதானமான பகுதியாகும்.
4) முதலாவது சதகர்னி அரசன் தக்ஷிணபதபதி என்னும் பட்டத்தைப் பெறுகின்றான்.
5) சாதவாகன மன்னரில் கௌதமி புத்திரசதகர்னியே தலைசிறந்தவன். (..............)

27) மகா அலெக்ஸ்ஸாண்டர்

1) கங்கைவரை மகா அலெக்ஸ்ஸாண்டர் தனது படைகளுடன் சென்றான்.
2) அவன் கி.மு. 326 இல் கைபர் கணவாய் மூலம் வடமேற்கு இந்தியா மீது படையெடுத்துச் சென்றான்.
3) வியஸ் நதிவரை மட்டுமே அலெக்ஸ்ஸாண்டர் ஆட்சி ஏற்பட்டிருந்தது.
4) அலெக்ஸ்ஸாண்டர் திரும்பிச் சென்றான். செலூக்கிக்கேற்றர் வடமேற்கு இந்தியாவில் ஆட்சி அதிகாரம் பெற்றான்.
5) அலக்ஸ்ஸாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்த காலத்தில் தனநந்தன் மகத மன்னனாக விளங்கினான். (..............)

28) ஹூணர் படையெடுப்புக்களின் விளைவுகள்

1) வட இந்தியாவின் ஒற்றுமையினைச் சீர்குலைத்தல்.
2) இந்தியாவின் செல்வங்களைச் சூறையாடினார்கள்.
3) அதன்பின் அவர்கள் வட இந்தியாவின் முதன்மை அரசனானான்
4) காஸ்மீரத்து பௌத்தப் பள்ளிகளும் கோவில்களும் அவர்களால் அளிக்கப்பட்டன.
5) ஹூனர் இந்திய சமுதாயத்தோடு கலப்புற்றதால் புதிய சாதி தோற்றம். (..............)

29) ஹர்ஷவர்த்தனன்

1) ஹர்ஷவர்த்தனன் பற்றிப் பாணபட்டர் ஒரு நீளமான கதையை எழுதியுள்ளார்.
2) ஹர்ஷவர்த்தனன் சாளுக்கியனுடைய பிரதேசங்கள் மீது படையெடுத்தான். ஆயினும் 2ம் புலிகேசியினைத் தோற்கடிக்க முடியவில்லை.
3) அவன் கன்னோசீலம் பிரயாசத்திலும் பல பௌத்த மகாநாடுகளைக் கூட்டினான்.
4) சீன யாத்திரிகனை சுவான்சாங் இந்தியாவிற்குச் சென்று நாலந்த பல்கலைக்கழகத்திலே சில வாரங்கள் தங்கியிருந்தார்.
5) ஹர்ஷவர்த்தனுடைய படை கௌட அரசனாகிய சாசங்கனுக்கு எதிராக முன்னேறிச் சென்று அவனது இராச்சியத்தைக் கைப்பற்றியது. (..............)

30) இந்தியாவிலே சுங்கரின் ஆட்சியில் மேல்வரும் வளர்ச்சிகள் ஏற்பட்டன.

1) பேரரசின் சிதைவு தவிர்க்கப்பட்டது.
2) பௌத்த சமயம் தடைசெய்யப்பட்டது.
3) பிராமணிய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
4) சமஸ்கிருதமொழி இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
5) சாஞ்சி சேதியம் புதிய கட்டுமானங்கள் பெற்று விசாலமாகியது. (..............)

agaram.lk



Scanned with CamScanner

31 - 35 வரையுள்ள எல்லா வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு மாற்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகள் ஆகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் 1 எனவும்,(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் 2 எனவும் (C) யும் (D) யும் மட்டும் சரியாயின் 3 எனவும்,(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் 4 எனவும் ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (A)யும் (B)யும் மட்டும் சரி | (B)யும் (C)யும் மட்டும் சரி | (C)யும் (D)யும் மட்டும் சரி | (A)யும் (C)யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

31) மௌரிய நிர்வாகம்

A) மகா அலெக்ஸாண்டர் கி.மு. 233 இல் இறந்தார்.

B) சந்திரகுப்த மௌரியன் கி.மு. 217 இல் கிரேக்கப் படைகளை அங்கிருந்து வெளியேற்றி மௌரியப் பிரதேசத்தைக் கைப்பற்றினான்.

C) சந்திரகுப்த மௌரியனின் ஆட்சிமுறை மெகஸ்தனிஸ் இண்டிகா என்ற நூல் மூலம் அறியலாம்.

D) அரசனின் அமைச்சர்களில் மிக முக்கியமானவர்கள் நாலவர். (..............)

32) ராஸ்டிரகூடர்

A) தக்கணத்தின் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒரு பலம் வாய்ந்த அரசினை அமைத்திருந்தார்.

B) அசோக சாசனங்கள் அவர்களைச் சத்தியபுத்திரர் என்று குறிப்பிடுகின்றன.

C) அராபியரைத் தோற்கடிப்பதற்கு சாளுக்கியருக்கு உதவி புரிந்தனர்.

D) மேற்கில் உள்ளவர்கள் கிழக்கில் உள்ளவர்கள் என்னும் அடிப்படையில் இரு பிரிவினராக விளங்கினர். (..............)

33) வங்காளத்துப் பாலர் வம்சம்

A) ராமசரிதம் பாலவம்சம் பற்றி விவரமாக வர்ணிக்கிறது.

B) கி.பி. 777 இல் தர்மபால அரச பதவிபெற்றான்.

C) தர்மபால அரசன் கன்னோசி மேற் படையெடுத்துச் சென்று அங்கே சக்கராயுதனை அரசனாக நியமித்தான்.

D) தர்மபால அரசன் விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தை நிறுவினான். (..............)

34) காந்தார சிற்பக்கலைப் பாணியின் முக்கிய அம்சம்

A) மனித அம்சங்களை இயல்பாகவே வெளிப்படுத்தல்.

B) புத்தர் சிலையின் இடப்பக்கத் தோள் சீவர உடையினால் மூடப்பட்டிருந்தது.

C) சாரணத்தில் உள்ள புகழ்பெற்ற ஆசனக்கோலப் புத்தர் காந்தார கலைஞர்களின் உன்னதமான வேறுபாடாகும்.

D) காந்தார சிற்பக்கலைகளில் கிரேக்க உரோமக் கலையின் செல்வாக்கு படிந்துள்ளது. (..............)



agaram.lk
Scanned with CamScanner

35) சமணம்

A) அஜித கேசகம்பலர் என்பவரே சமணத்தின் ஸ்தாபகர்.

B) சமணர் கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்.

C) சமணரின் திகம்பரர் ஸ்வேதம்பரர் என்னும் இரு பிரிவினர் இருந்தனர்.

D) சாதிமுறை யஞ்ஞம் என்பவற்றைச் சமணர் ஒப்புக்கொள்ளவில்லை. (..............)

➢ 36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச்சோடிக்குக் கீழேயுள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகப் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | சரியானது | பிழையானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாயிருப்பதோடு 1ம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 36) | விந்திய சற்புத்திரமலைத்தொடர் இந்தியாவை வடக்குத் தெற்காகப் பிரிக்கின்றது. | வடநாட்டு ஆதிக்கம் தென் நாட்டின் பரவாதும் நிலைபெறாதும் தடுப்பதற்கு இதுவே காரணம். (..........) |
| 37) | தக்கணத்தை ஆட்சிபுரிந்த மேலைச் சாளுக்கியரின் தலைநகராக வேங்கி அமைந்திருந்தது | இரண்டாம் புலிகேசி மேலை சாளுக்கிய மன்னரில் மிகவும் சிறந்தவன். (..........) |
| 38) | ராஜதரங்கினி காஸ்மீர் தேசத்து வரலாற்றை வர்ணிக்கின்றது. | பாணர் ராஜதரங்கினியை எழுதினார். (..........) |
| 39) | வஜ்ஜி கூட்டமைப்பினரே நான்கு பிரதானமான இனக்குழுக்களாக இருந்தன. | கி.மு. 6ம் நூற்றாண்டிலே வஜ்ஜி கூட்டமைப்பே ஆரியவர்த்தத்தில் ஆதிபத்தியம் பெற்றிருந்தது. (..........) |
| 40) | பால பிரதிகார போராட்டங்கள் என்னும் தகராறின் விளைவாக ஏற்பட்டவை. | வட இந்தியாவில் மேலாதிக்கம் பெறுவதற்காக பாலரும் பிரதிகாரரும் பலமுறை போர்கள் புரிந்தனர். (..........) |

agaram.lk



Scanned with CamScanner

## பகுதி - II

அறிவுறுத்தல் :

- முதலாம் (1) வினாவுக்கும் ஏனையவற்றுள் மூன்று வினாக்களுக்குமாக விடை எழுதுக. (முதலாம் வினாவுக்கு விடையளிக்க இந்தியாவின் புற உருவப்படம் ஒன்று வழங்கப்படும்.)

1. உமக்குத் தரப்பட்ட வரைபடத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

   i. ஹரப்பா
   ii. தஞ்சாவூர்
   iii. ஆரவல்லி
   iv. பட்னா
   v. புருஷபுரம்
   vi. காவேரிநதி
   vii. கபிலவஸ்து
   viii. தாம்ரலிப்தி

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி
சிறுகுறிப்பு ஒவ்வொன்றும் 05 புள்ளிகள்)

2. சிந்துவெளி நாகரிகத்தின் தொடக்கம் வீழ்ச்சி என்பன பற்றி சொல்லப்பட்ட வெவ்வேறு விளக்கங்களைப் பரிசீலனை செய்க. (14புள்ளிகள்)

3. வேதகாலத்துச் சமூக அரசியல் நிலைகளின் பிரதான அம்சங்கள் பற்றி ஆராய்க. (14புள்ளிகள்)

4. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணிகளைப் பரிசீலனை செய்க. (14புள்ளிகள்)

5. "தக்கணத்திலே சாதவாகனர் முதலாவது பேரரசை அமைத்தார்கள்"
   i. சாதவாகன வம்சத்து முதல் அரசனின் பெயரைக் குறிப்பிடுக.
   ii. சாதவாகனராலே தோற்கடிக்கப்பட்ட வட இந்திய இராச்சியங்கள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக
   iii. சாதவாகனர் காலத்து கலை, கட்டடக்கலை என்பன பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக.
   iv. முன்னே சொல்லப்பட்ட கூற்றினை ஒப்புக்கொள்வீரா? உமது காரணங்களைக் குறிப்பிடுக.

(1+2+4+7=14புள்ளிகள்)

6. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்க. (14புள்ளிகள்)

7. மௌரியர்களின் ஆதிக்கத்தை வட இந்தியாவில் ஏற்படுத்துவதில் சந்திரகுப்த மௌரியனின் பங்கினை ஆராய்க. (14 புள்ளிகள்)


8. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி குறிப்புரை எழுதுக.
   i. கூணர் படையெடுப்பு
   ii. 4ம் பௌத்த மாநாடு
   iii. சமுத்திரகுப்தனின் படையெடுப்பு
   iv. அல்கபாத் பிரசஸ்தி

(ஒன்றுக்கு 7புள்ளிகள்)

9. இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியில் குசாணர்களின் பங்களிப்பைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner




agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

# Term Examination, March - 2016

FWC

| இந்திய வரலாறு | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 3 | 21) | 3 | 31) | 3 |
| 02) | 2 | 12) | 5 | 22) | 4 | 32) | 4 |
| 03) | 1 | 13) | 3 | 23) | 5 | 33) | 5 |
| 04) | 2 | 14) | 3 | 24) | 3 | 34) | 4 |
| 05) | 1 | 15) | 4 | 25) | 4 | 35) | 3 |
| 06) | 3 | 16) | 2 | 26) | 2 | 36) | 5 |
| 07) | 5 | 17) | 1 | 27) | 1 | 37) | 4 |
| 08) | 4 | 18) | 2 | 28) | 3 | 38) | 1 |
| 09) | 5 | 19) | 5 | 29) | 5 | 39) | 3 |
| 10) | 2 | 20) | 4 | 30) | 2 | 40) | 5 |

## பகுதி - II

2. தொல்பொருட் சான்றுகள் ஆதாரம், ஆரம்பநிலை பற்றிய தெளிவு இல்லை, பல்வேறு கருத்துக்கள்
(R. C. மஜூம்தார், A. L. பாஷாம், R. D. பானர்சி எனப் பலர் கருத்து)
மோட்மார் வீலர் - நகரமயமாக்கம் பற்றிய செறிந்த அறிவு மக்கள்.
எலியட், ஸ்மித் - எகிப்திய நாகரிக கிளை
கிளீன்டேனியல் - மேற்கிதிய கிராமியத் தன்மையின் தோற்றம்.

வீழ்ச்சி பற்றியும் பல கருத்துக்கள்
வெள்ளப் பெருக்கு (ராவி ஆற்றின் போக்கு மாறுதல்) ஜோன் மார்ஷல், மோட்டிமார் வினர் உறுதி.
படிப்படியாக வீழ்ச்சி (பொருளாதார வீழ்ச்சி, பலவீன ஆட்சி, சனத்தொகை அதிகரிப்பு, காலநிலை மாற்றம், தொற்றுநாய்)
பகைவர் ஆக்கிரமிப்பு (திடீர் தாக்குதல், தீப்பற்றல், ரிக்வேதக் கூற்று, கடவுளின் கோபம்)
தென்னிந்தியாவை நோக்கி நகர்தல்.
(விடையினை மாணவர்கள் தர்க்க ரீதியாக முன்வைப்பது அவசியம்)

3. சமூகம்
கோத்திரங்கள்
கிராமிய இயல்பு - பலகுடும்பங்கள் - கிராமம்
குடும்பத்தலைவன் - தந்தை - முதன்மைநிலை - ஆண்

ஆரியர் - ஆரியர் அல்லாதோர்
பெண்கள் சிறப்புநிலை
குடும்பத்தலைவன் + மனைவி பூசை வழிபாடு
சிலபெண்கள் உயர்கல்வி (விஷ்வவாரா, அபாலா, கோஷா)



agaram.lk
Scanned with CamScanner

திருமணம் - சந்ததி பெருக்கம்
மரண இறுதிச்சடங்கு - ஆண் மகவு
திருமணம் - சீதனம் (தானியம், கால்நடை)

ஒருதாரமணம் /பலதாரமணம்
விதவை மறுமணம்
மதுபானம் அருந்தல்
சோமபானம்
எளிய ஆடை (தோல்,பருத்தி)

அரசியல்
கோத்திரம் முதன்மை
பஞ்சஜனம், பரத ஜனம்,யது ஜனம் குழுக்கள்
குழுப்பிரதானி - தலைவன்
சபா .சமிதிஎன 2 சனபகரன்
ஜனம், விஸ், கிராமம் என்பன முக்கிய நிர்வாகப் பிரிவு புரோகிதர் / சேனானி ஒற்றர் படை
மண்ணுக்கு உதவி
மன்னன் நிலச் சொத்துக்காரன்
விதாதா சபை

4. திறமையற்ற மன்னர்கள், பிராந்திய ஆட்சியாளர் பலம் பெறுதல், பரந்துபட்ட பேரரசு, அசோகன் பௌத்த சமயக் கொள்கையைக் கடைப்பிடித்தல், பிராமணிய எதிர்ப்பு, உடல் பூசல், பொருளாதாரநலிவு, நாட்டு எல்லைப் பாதுகாப்புக் குறைதல், அந்நியப் படையெடுப்பு, சுங்கவம்க் கிளர்ச்சி

agaram.lk

5.
i. சிமுகன்
ii. சுங்கர் கண்வர்
iii. பௌத்த மதக் கட்டட எழுச்சி (தூபி, விகாரை), பாறைகள் குடைந்த பௌத்த பள்ளி, துறவிகள் வசிக்கக் குடைந்திருந்த விகாரை, புத்தசமயக் கல்லூரி - சாங்கராமா, தூபி புனித எச்சம் மீது எழும் கட்டடம், குகை விகாரை - பாஜாங் / பெத்சாங் / கார்லே / மன்னார் / நாசிக் / கன்ஹேரி / அய்தா
விகாரை இயல்பு - நடுமண்டபம், தானசாலை, சிறு அறைகள்
படுக்கை /மேசை - கல்லில் அமைதல்
ஊற்றுக்களில் குளம்
ஸ்தூபி - அமராவதி ஸ்தூபி புதிய அங்கம்
சேர்ப்பு - விசாலமாக்கல்
புதிய ஸ்தூபிகள் அமைத்தல்
சாஞ்சி தூபி, வாகல்கட செதுக்கல் கலை
சிற்பம் - சித்திரக்கலைகள்
புத்தர் உருவம் - சித்திரமாக்கல்
பௌத்த கதைகள்
நாணயங்களிலும் கலையம்சம்


Scanned with CamScanner

iv. விந்தியமலைக்குத் தெற்கே டெக்கான் பிரதேச முதலாவது பெரிய பேரரசு, சுங்கர் கண்ணுவர் அடிமைப்படுத்தல், முதல் ஆட்சியாளர் சிமுகன், கன்வமன்னன் கீழ் இருந்த சிமுக சுசார்மனைகொன்று அரசனாதல், 23 வருட ஆட்சி

சிமுகதம்பிகன்ஹர் 18 வருடஆட்சி, நாசிக்வரை ஆட்சி விஸ்தரிப்பு

சாதகர்ணி - 56 வருட ஆட்சி

மாள்வா அனுபா விதர்பா பகுதி இணைப்பு,

2 தடவை அஸ்வமேதயாகம்,

1 தடவை ராசசூ யாகம், தக்கண பதாபதிபட்டம் பெறல்

சாதவாகன அரசை எழுச்சி பெறச் செய்தவன்.

கௌதமிபுத்திரசாதகர்ணி. - சாகர், யவனர், பகலர் ஆதிக்கத்தை அழித்தவர்.

நாகாபானாவைத் தோற்கடித்து மேற்கு, கிழக்கு அவந்திமாளவம், அனுபாசத்தியவார் பகுதிகளை கைப்பற்றல். வடக்கேமானவம் சத்தியவார், கிழக்கில் பெசாவார், மேற்கு கொங்கான், தெற்குகிருஸ்ணா, கோதாவாரிவரை ஆட்சி பரப்பல்

விக்கிரமாதித்தர், விந்திய அதிபதி பட்டப் பெயர்

வசிஸ்ட புத்திரபுலுமாயி ஆட்சிக்காலம்

பெல்லாரி பிரதேச இணைப்பு

பின் சிவதகர்ணி ஆட்சி - சாகர்களை

தக்கணம் விட்டு விரட்டல்

ஸ்ரீயக்ஞசதகர்ணி ஆட்சியை கட்டி எழுப்பல்

6. பலவீனமான மன்னர், சிம்மாசன போட்டி, பிரதேச ஆட்சியாளர் பலம், சுதந்திரம், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு (கூனர்)

அரசியல் மதபொருளாதாரக் கொள்கை மாற்றம் (புதகுப்தன் காலம்), தக்கண ஆட்சியாளர் விடுவிக்கப்படல், நெல்வயல் களஞ்சியம் கைநழுவல், சர்வதேச வணிகம் அராபியர் ஏகாதிபத்தியம், சமயநிலை, சமூகப் பிளவு, அந்நியத் தலையீடு

7. மௌரியப் பேரரசுக்கு அத்திவாரமிட்டவன்

ஆரம்ப ஆட்சியாளன்

வட இந்தியாவில் பரவ வகை செய்தல்

பிந்துசாரன் பாதுகாத்தல்

அசோகன் கலிங்கம் கைப்பற்றுதல்

சந்திரகுப்தனே பெரிய நிலப் பரப்பைக் கைப்பற்றுதல்.

கி.மு. 324 - 300 ஆட்சிக்காலம், கௌடில்யர் துணை - பேரரசு விரிவாக்கம், போர்கள் மூலம் அரசைக் கட்டியெழுப்பல், தனநந்தனை வெற்றி கொள்ளல், மகதம் ஆட்சிக்கு வருதல், வடமேற்கு இந்தியா கைப்பற்றல், செல்யூக்கஸ் நிகேடரை தோற்கடித்தல்,

வடஇந்தியா முழுவதும், தக்கண பெரும்பகுதி ஆதிக்கம் நிலைநாட்டல்.

நல்லாட்சியாளன்

agaram.lk



Scanned with CamScanner

8.

i. மேற்காசியாவின் வட இந்தியாவில் ஒருகோத்திரம்
கி.பி.5 ஐரோப்பா, ஆசியாவை அச்சுறுத்தல், எவ்லைட் பிரிவினர் - ஒக்ஸஸ் நதிபகுதியைக் கைப்பற்றல், ஆப்கானிஸ்தான் வழியாக வருதல்
பெலாரஸ் பகுதியில் வைத்து ஸ்கந்தகுப்தனால் வெல்லப்படல். நிலையான ஆட்சியாளர் இல்லை. கி.பி. 6ம் நூற்றாண்டில் தோராமாணன் பஞ்சாப் வழியாக இந்தியா வரல்.
புதுகுப்தன் காலம் - மத்தியபிரதேசம் கைப்பற்றப்படல் - ஆட்சியாளன் தோராமாணன் சகோதரன்.
தோராமணன் நாணயங்கள் - இராசபுத்தானம், பஞ்சாப், காஷ்மீர் இடங்களில் கிடைத்தல், சமண மதத்தைத் தழுவி வாழ்தல், கூணர்களின் சிறந்த ஆட்சியாளன், தோராமாணனின் மகன் மிஹிரகுலன், சியல் கோட்டை அவன் தலைநகரம்.
காஷ்மீர், காந்தாரம், தென்னிந்தியா, இலங்கை ஆட்சி செய்தான்.
வட இந்தியாவிலும் ஆட்சி (ஹியூங்காங்), கொஸ்மஸ் தகவல்)
பலவீனமான மன்னன் நரசிம்மகுப்தனிடம் கப்பம் பெறுதல்.
சரவர்மனின் தாக்குதலால் வட இந்தியாவில் வீழ்ச்சி, துருக்கி ஈரான் ஆக்கிரமிப்பும் வீழ்ச்சிக்கு காரணம்.

ii. கனிஸ்க மன்னன் காலம் நடைபெற்ற இடம் காஷ்மீர் குண்டலபவன விகாரை / கிழக்கு பஞ்சாப்பில் வசுமித்திரர் தலைமை அஷ்வகோஷர் உதவி, 6 மாதம் 500 பிக்குகள், மகாயான பௌத்தம் தூய்மைப்படுதல், மகாயானத்தில் 18 பிரிவுகள், மகாயானம் தனித்து வளர உதவி, மகாயான திரிபீடகம் வளர்ச்சி ஒழுங்கமைப்பு, திரிபீடகம் செப்பேடுகளில் எழுதப்படல், பௌத்தம் மத்திய ஆசியா வரை பரவக் காரணம்

iii. சமுத்திரகுப்தனின் படையெடுப்பு
திக் விஜயக் கொள்கை. ஆரியாவர்த்தனம் (கங்கை சமவெளி), மலைப்பிரதேச கோத்திர தலைவர்கள் மீதுபோர், தெற்கில் 11 ஆட்சியாளர் மீதுபோர், தொலைவிலுள்ள அரசுகளை விழிப்புறச் செய்யும் படையெடுப்புக்கள், வட இந்தியாவின் 9 மன்னர்கள் தோற்கடிப்பு, நேரடியாகத் தனது அரசுடன் இணைக்காவிடினும் கப்பம் பெறல், இணைந்த அரசுகளைத் திரும்ப அவர்களிடமே இணைத்து செயற்படச் செய்தல், மகளைத் திருமணம் செய்துதரல், சிற்றரசப் பேரரசாக்கல், எல்லைப்புற அரசுகளை அடக்கல்

iv. சமுத்திரகுப்தனை அறிய உதவும், அரிசேனர் எழுதல், அல்காபாத் கோட்டையில் அசோக தூண் மீது செதுக்கப்பட்டது. முற்பகுதி சமுத்திரகுப்தன் ஆட்சி பெற்றதை கூறும். இரண்டாது அரசை விரிவுபடுத்த படையெடுப்பு, கைப்பற்றிய பிரதேசம் ஆட்சியாளர் பற்றிக் கூறும்., திறை செலுத்தல், மரியாதை செலுத்தல் பற்றிய வர்ணனை, இந்தியாவுக்கு வெளியே ஆட்சிசெய்த அரசர்கள் தூதுவர்களை பரிசுப் பொருட்களை அனுப்பி விபரம் கூறல்.

9. வெளிநாட்டவர்
காட்பிசஸ் - வடமேற்கு இந்தியா கைப்பற்றல், தட்சமூலம் பஞ்சாப் கைப்பற்றல்,
கனிஸ்கள் சிறந்த மன்னன் - பௌத்த வளர்ச்சிப்பணி, அரசியல் பொருளாதாரம் பௌத்தமத வளர்ச்சிக்கு பெரும்துணை, இந்திய பண்பாட்டைத் தமதாக்கி உதவுதல், புருஷபுரம் - குந்தலவன - 4ம் பௌத்த மாநாடு, பௌத்த பரவ தொடங்கல், இந்தியாவில் மட்டுமல்ல கஷ்கார், கோட்டான், யார்கண்ட, சீனா பௌத்த பிரசாரம்.
மகாபாஷ்யம் செப்புத் தகட்டில் எழுதப்படல்.
புத்தசமயப் புனிதர் சிலை (போதிசத்துவர்)
சமயச் சடங்குகள் தோற்றம், புருஷபுரத்தில் 14 மாடிகொண்ட மண்டபம் சமய பரப்புக் குழு அனுப்பல், இலக்கிய நூல்கள் எழுச்சி, மகாயான பௌத்தம், தோற்றம் - காந்தாரக்கலை வளர்ச்சி

agaram.lk



Scanned with CamScanner